# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : D.V.C. No. 6/2024**

**Prosecution Witness : P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சோனியா | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 07/07/2025

**குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில்)**

இந்த வழக்கின் விவரங்கள் முழுமையாக தெரியும் என்றால் சரிதான். என்ன படித்திருக்கிறேன் என்றால், M.Sc. வரை படித்திருக்கிறேன். M.Sc. எப்போது படித்தேன் என்றால், திருமணத்திற்கு பின்பு என் கணவரை விட்டு பிரிந்த பிறகு படித்தேன். பிரமாணத்தை படித்து பார்த்து தான் தாக்கல் செய்தேன். நான் இந்த வழக்கில் என்னுடைய பொருட்களை திரும்ப ஒப்படைக்க கோரி மனு செய்து அது CMP 484/2025 என்று நிலுவையில் இருக்கும் போது தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எ ப்போது திருமணம் நடந்தது என்றால், 05.03.2020 ல் நடந்தது. திருமணத்திற்கு நிச்சயதார்த்தம் எப்போது நடந்தது என்றால், நிச்சயதார்த்தம் நடக்கவில்லை.

பெண் பார்த்து விட்டு 1 மாதத்திலேயே திருமணம் நடந்தது. அவர்கள் வீட்டிலிருந்து எங்கள் வீட்டிற்கு வந்து சம்பிரதாயங்கள் நடந்த பின்பு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு எங்கு குடியிருந்தோம் என்றால், எதிர்மனுதாரர் பெற்றோர் வீடு திருநின்றவூரில் வசித்தோம். என்னுடைய பெற்றோர் வீட்டு

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA

முகவரி எண்.8/408, வஉசி தெரு, உப்பரபாளையம், எடப்பாளையம், செங்குன்றம் ஆகும். தற்போது மேற்படி விலாசத்தில் என் சொந்த வீட்டில் தான் நான் வசித்து வருகிறேன் என்றால், சரிதான். எதிர்மனுதாரரின் தாயாரும், தந்தையும் வயதானவர்கள் என்றால், மாமியாருக்கு சுமார் 45 வயது இருக்கும். மாமனாருக்கு 60க்கு மேல் இருக்கும். எதிர்மனுதாரருக்கு என்ன வயது இருக்கும் என்றால், 35 இருக்கும். என் கணவரின் தாய், தந்தைக்கு மிகுந்த வயது முதிர்ச்சி உள்ளது என்றால், சரியல்ல. என் கணவருக்கும் அவரது தாய்க்கும் என்ன வயது வித்தியாசம் இருக்கும் என்றால், தெரியாது.

என் கணவருக்கும் அவருடைய பெற்றோரை கவனிக்கும் பொறுப்பு உள்ளது என்றால், சரிதான். எதிர்மனுதாரர் எந்த முகவரியில் தற்போது வசிக்கிறார் என்றால், எண்.234, 4வது குறுக்கு தெரு, பிரதான சாலை, புது காந்தி நகர், திருநின்றவூர் ஆகும். கணவரை விட்டு பிரிந்த பின்பு M.Sc. எங்கு படித்தேன் என்றால், அன்னனூர் செயின்ட் பீட்டர் காலேஜில் படித்தேன். எதற்காக எப்படி படித்தேன் என்றால், என்னுடைய தாயாரின் நகைகளை அடகு வைத்து தான் படித்தேன். குடும்ப வாழ்க்கையில் பிரச்சனை இருந்து மிகவும், சோர்வுடன் இருந்ததால், அதிலிருந்து மீண்டு வர படித்தேன். அதன் மூலமாக நல்ல வேலை கிடைக்கும் என்று படித்தேன். திருமணத்திற்கு பிறகு தனிக்குடித்தனமா, கூட்டுக் குடும்பமா என்றால், கூட்டுக் குடும்பத்தில் தான் வசித்தேன்.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA